காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் - தமிழ்நாடு
Joint Action Against Custodial Torture - Tamil Nadu
32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-89391 54752 +91-99943 68571 +91-94426 18117 E.mail: jaacttn@gmail.com

**பாதிக்கப்பட்டவர்களை, அவர்களின் வாக்குமூலங்களை முன் வைக்கும், பத்திரிக்கையாளர் சந்திப்பு**

.........................................................

**சென்னை G-5, காவல் நிலையத்தில்**
**விக்னேஷ் சித்திரவதை செய்யப்பட்டு அடித்துக் கொலை**

அன்பார்ந்த பத்திரிக்கை/தொலைக்காட்சி நண்பர்களுக்கு வணக்கம்!

சென்னை பெருநகர காவல் கட்டுப்பாட்டு அறையை சேர்ந்த உதவி ஆய்வாளர் மற்றும் G-5, தலைமைச் செயலகக் குடியிருப்பு காவல் நிலைய காவலர் 50311 பொன்ராஜ் மற்றும் ஊர்க்காவல் படையைச் சேர்ந்த 5019 ஆகியோர் சென்னை புரசைவாக்கம் பிரிக்ளின் சாலை சந்திப்பில் 18.04.2022 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது ஆட்டோவில் வந்த விக்னேஷ் (23) சுரேஷ் (எ) ஜொள்ளு சுரேஷ் (30) ஆகியோரை விசாரணை என்ற பெயரில் அடித்து சித்திரவதை செய்ததில் விக்னேஷ் இறந்து போனார்.

இது சம்பந்தமாக News Minute தொலைக்காட்சியில் வெளிவந்த செய்தியின் அடிப்படையில் ஏப்ரல் 21ம், தேதி மாலை முதல் நள்ளிரவு வரை The News Minute அஹமது, Times Now ஷில்பா மற்றும் மக்கள் கண்காணிப்பத்தின் இ.ஆசீர் ஆகியோர் பாதிக்கப்பட்டவர்களை சந்திக்க தேடி உள்ளனர். ஆனால் எவரையும் சந்திக்க முடியவில்லை. குறிப்பாக விக்னேசின் இரண்டாவது அண்ணன் விஜய் என்பவரை சந்திக்க பட்டினம்பாக்கம் சீனிவாசபுரம் சென்ற போது வீட்டை இன்றுதான் காலி செய்தார் என வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

ஏப்ரல் 22, காலை சுமார் 9.00 மணியளவில் விக்னேசின் மூத்த அண்ணன் வினோத் என்பவரை சந்தித்தோம். அதன் பின்னர் போலீசின் அச்சுறுத்தலுக்கு

பயந்து கொண்டிருந்த மற்ற சகோதரர்கள், மேலும் விக்னேஷின் அத்தை, மாமா ஆகியோரை சந்தித்தோம். இவர்கள் அனைவரும் முதலில் நம்மிடம் கேட்ட உதவி காவல்துறை அச்சுறுத்தலிருந்து பாதுகாப்பு வேண்டும் என்றார்கள். அதனால் நாம் இவர்களை பாதுகாக்க முழுக்கவனம் செலுத்தினோம். எப்போதும் கள ஆய்வுப் பணியின் போது பாதிக்கப்பட்டவர்கள், பாதிப்பு ஏற்படுத்தியவர்கள் என இரு தரப்பினரையும் சந்தித்து உண்மையைக் கண்டறிந்து அறிக்கை வெளியிடப்படும். விக்னேஷ் வழக்கில் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிவதற்கும், பாதுகாப்பதற்கும் முழுக் கவனம் செலுத்தப்பட்டதால் காவல்துறை தரப்பினரை சந்திக்க இயலவில்லை. எனவே இந்த பத்திரிக்கையாளர் சந்திப்பின் நோக்கம், பாதிக்கப்பட்டவர்களை, அவர்களின் வாக்குமூலங்களை உங்கள் முன் முன்வைக்கும் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு கூட்டமாகும்.

விக்னேசின் உடன் பிறந்த சகோதர்கள் 1. வினோத் (30), 2. விஜய் (28), 3.விக்னேஷ் (26), 4. வீரா (24), 5. சத்தியா (22), 6. சூரியா (20) என ஆறு நபர்கள் ஆவர். இவர்கள் அப்பா அம்மாவை சிறு வயதில் இழந்தவர்கள். வீடற்ற இவர்கள் சென்னையில் தெருவில் வளந்தவர்கள். பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை போன்றவையின் தேவை குறித்தோ, பெறுவது குறித்தோ அறியாத நிலையில் வாழ்ந்து வரும் சகோதரர்கள்.

விக்னேஷின் அண்ணன் வினோத் (30), சம்பவ சாட்சியான ஆட்டோ டிரைவர் பிரபு (28) மற்றும் சுரேஷின் அம்மா கற்பகம் ஆகியோரின் வாக்குமூலங்களை பெற்று, மனித உரிமை ஆணையங்கள், நீதிமன்றங்களுக்கு கொடுப்பதற்கு பயன்படுத்திய வாக்குமூலங்கள் மற்றும் பறிந்துரைகளை இந்த பத்திரிக்கையாளர் சந்திப்பின் மூலம் முன்வைக்கிறோம்.

# ஆவணங்களின் பட்டியல்


| வ.எண் | ஆவணம் | பக்கம் |
|---|---|---|
| 1. | வினோத் (30) த/பெ வடிவேல் வாக்குமூலம்<br>(விக்னேஷின் உடன்பிறந்த மூத்த அண்ணன்) | 1 - 8 |
| 2. | பிரபு (30) த/பெ குணசேகரன் வாக்குமூலம்<br>(சம்பவ சாட்சியான ஆட்டோ டிரைவர்) | 9 - 12 |
| 3. | கற்பகம் (51), க/பெ. கணேசன், வாக்குமூலம்<br>(சித்திரவதையால் பாதிக்கப்பட்ட ஆட்டோ டிரைவர் சுரேசின் அம்மா) | 13 - 14 |
| 4. | கண்டறிந்தவைகள் | 15 - 23 |
| 5. | காவல் மரணம் நிகழ்வுக்குப் பின் நடந்தவை | 24 - 29 |
| 6. | Copy of the Memorandum sent to Chief Justice of the Madras High Court | 30 - 32 |
| 7. | Copy of the Memorandum sent to The Chairperson, SHRC | 33 - 35 |
| 8. | Copy of the Memorandum sent to Executive Chairman of Tamil Nadu Legal Services Authority | 36 - 38 |
| 9. | பரிந்துரைகள் | 39 - 46 |

## வினோத் (30) த/பெ வடிவேல் வாக்குமூலம்
## (விக்னேஷின் உடன்பிறந்த மூத்த அண்ணன்)

எனது பெயர் வினோத். எனது அப்பா பெயர் வடிவேல்; அம்மா பெயர் காஞ்சனா. நான் ஆதி திராவிடர் பறையர் சமூகத்தை சேர்ந்தவன். எனக்கு ஐந்து தம்பிகள் உள்ளனர். வீட்டில் மூத்த பையன் நான்தான். எனக்கு அடுத்து பிறந்த தம்பிகள் பெயர் விஜய் (27), விக்னேஷ் (22), வீரா (21), சத்யா (23), சூர்யா (17) ஆகியோர் ஆவார்கள்.

எனக்கு 20 வயது இருக்கும் போது எனது அப்பா இறந்து, அம்மாவும் இறந்து விட்டார். அதனால் நாங்கள் அனைவரும் அப்பா, அம்மா ஆதரவு இல்லாமல்தான் வளர்ந்தோம். மேலும் எங்களுக்கு சொந்தமா வீடு இல்லை. நாங்கள் சிறு வயதில் இருந்தே தெருவில் தான் வளர்ந்தோம். குறிப்பா நாங்க தூங்கி வளர்ந்தது எல்லாம் சென்னை மெரினா பீச்சுதான். எங்களுக்கு உறவுனு சொல்வதற்கு எங்க அப்பா கூடப் பிறந்த தங்கையான அத்தை மட்டும் இருக்காங்க. ஏதாவது பிரச்சனைனா அவங்க ஆதரவு மட்டும் கிடைக்கும்.

எனது தம்பி விஜய் (27) மட்டும் திருமணம் செய்துள்ளான். அவனது மனைவி பெயர் தீபா (24). இவர்களுக்கு ஐந்து மாதத்தில் ஒரு பெண் குழந்தை உள்ளது. எங்களில் வேறு யாருக்கும் திருமணம் நடக்கவில்லை. எனது தம்பி பட்டினப்பாக்கம், சீனிவாசபுரத்தில் ஒரு ரூம் வாடகைக்கு எடுத்து தங்கி இருந்தான். நான் ஓட்டேரி இராகவன் தோட்டத்தில் ஒரு வாடகை ரூம்ல தங்கி இருக்கேன். மற்ற நாலு தம்பிங்க, என் ரூமுக்கும், விஜய் ரூமுக்கும் மாறி, மாறி வந்து போவாங்க. நான் உட்பட தம்பிகள் இரவு தூங்கிறது எல்லாம் மெரினா பீச்சுதான்.

சின்ன வயதிலிருந்தே மெரினா பீச்சுதான் வாழ்க்கை. நான் மெரினாவில், துப்பாக்கியால் சுட்டு பலூன் உடைக்கிற கடையில் வேலை செய்கிறேன். ஒரு நாளைக்கு 300 ரூபாய் கூலி. தினமும் சிக்கனமா சாப்பிட்டா 150 ரூபாய் செலவாகும். மீதத்தை சேர்த்து வச்சு மாதம் நான் தங்கி இருக்கிற ரூம் வாடகை

ரூ.3,500/- கொடுத்து விடுவேன். மாதக் கடைசியில் மீதம்னு எதுவும் இருக்காது. என் தம்பிங்க மெரினா பீச்சுல குதிரை ஓட்டுவது தான் வேலை. ரஞ்சித் என்பவருடைய குதிரைதான் ஓட்டுறான். குறிப்பா என் தம்பி விக்னேஷ் சின்ன வயசுல இருந்தே குதிரை ஓட்டிட்டு வர்றான். அவனுக்கும் ஒரு நாளைக்கு 300 ரூபாய் தான் சம்பளம். எப்பவாவது சினிமா சூட்டிங்கிக்கு போனா கொஞ்சம் துட்டு அதிகமா கிடைக்கும். சனி, ஞாயிறு மெரினா பீச்சுலு ஓரளவுக்கு தொழில் நடக்கும் அப்ப எங்க ஓனரு நூறு ரூபாய் கூடுதலா கொடுப்பார். மற்ற நாட்களில் தொழில் டல்லாத்தான் இருக்கும்.

விக்னேஷ் G5, போலீஸ் டேசனில் இறந்த பின்னாடி போலீஸ், என் தம்பி விஜய் குடியிருந்த ரூம் ஓனர்கிட்ட சொல்லி, ரூமையை காலி பண்ண வச்சுட்டாங்க. எனக்கும் போலீஸ் நெருக்கடி கொடுத்ததால் பயந்து கொண்டு வெவ்வேறு இடத்துல சுத்திக்கொண்டு திரியுறேன். என் தம்பிகளும் போலீசுக்கு பயந்து எங்கே இருக்காங்கனு தெரியல. விக்னேஷ் இறந்த பின்பு இப்படித்தான் எங்க நிலம உள்ளது.

என் தம்பி விக்னேஷ் ரொம்ப நல்லவன்; அமைதியா இருப்பான். அவன் உண்டு, அவன் வேலை உண்டுனு இருப்பான். கொரோனா தடைக்கு முன்னாடி விக்னேஷ் ஓனர் ரஞ்சித் என்பவருக்கு சப்போட்டா ஒரு அடிதடி சம்பவத்துல அவன் மேல் கேஸ் இருக்கு. வேற எந்தக் கேஸூம் அவன் மேல் இல்லை. பகல் நேரத்தில் என் ரூமுக்கு வருவான். அடிக்கடி என் தம்பி விஜய் வீட்டுக்கு போவான். வேறு அனாவசியமா எங்கயும் போகமாட்டான். போன வாரத்தில் சூர்யா பட சூட்டிங்கிற்காக குதிரையை ஓட்டிட்டு சூட்டிங் போய் போயிருக்கான். அதுக்கு அப்புறம் ஞாயிற்றுக்கிழமை (17.4.2022) அன்று தான் விஜய் வீட்டுக்கு போயிருக்கான். விஜய்க்கு குழந்தை பிறந்து ஐந்து மாதம் ஆகுது. அதனால் சூட்டிங்ல கிடைச்ச பணத்துல குழந்தைக்கு டிரெஸ்செல்லாம் எடுத்துக் கொடுத்து சந்தோசமா இருந்திருக்கான். அவனோ குதிரைக்கிட்ட எங்க குடும்பத்துல பெண் குழந்தை பிறந்திருக்குனு சொல்லி கட்டிப் புடிச்சு முத்தம் கொடுத்தானாம். இதனை என் தம்பி விஜய் என்கிட்ட சொன்னான்.

என் தம்பி விக்னேசை போலீஸ் பிடித்த சம்பவம் அல்லது இறந்த சம்பவம் எனக்கு எதுவும் தெரியாது. 19.04.2022 செவ்வாய்க்கிழமை காலை சுமார் 12.00 மணி இருக்கும் நான் என்னோட ரூம்ல குளிச்சிக்கிட்டு இருந்தேன். அப்போ திடீர்னு பட்டினப்பாக்கம் இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி தலைமையில் ஐந்து போலீஸ் என்னோட ரூமுக்குள்ள வந்தாங்க. அதுல ஒருத்தர் யூனிபாம்ல இல்லை. மேலும் என் தம்பி சூர்யாவும் கூட வந்திருந்தான். நான் தங்கி இருக்கிற ரூம் 10 x 8 சைஸ்தான் இருக்கும். அதுக்குள்ள கதவு இல்லாத பாத்ரூம்ல குளித்துக் கொண்டிருந்த நான் உடம்பில் சோப்பு நொறையோட வெளிய வந்தேன். அப்போ பட்டினப்பாக்கம் இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி மேடம் என்னிடம், நீதான் வினோத்தா என்றார். நான் ஆமாம் என்றேன். உடனே போலீஸ் ஸ்டேசனுக்கு கிளம்புடானு சொன்னாங்க. நான் குளிச்சிட்டு வர்ரேனு சொன்னேன். அப்போ இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி, டேய் அப்படியே வானு சொன்னாங்க. அதனால நான் சோப்பு நொறையோட டிரெஸ் மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டேன்.

நான் குடியிருக்கிற ஓட்டேரி இராவணத் தோட்டம் பகுதியில் சுமார் அஞ்சு வருடமா குடியிருக்கேன். என்னோட ரூமை சுற்றி குடியிருக்கிற எல்லோரும் பேமிலியா இருக்காங்க. நான் மட்டும் பேச்சுலரா இருக்கேன். இதுவரை யாரும் என்னை தப்பா பேசினது இல்லை. எதிர் வீட்டுல இருக்கிற பாட்டி மட்டும் என்னிடம் அன்பா பேசுவாங்க. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பொது ஜனங்க முன்னாடி என்னை ஒரு கைதியை கூட்டிட்டு போற மாதிரி என்னை அசிங்கப் படுத்தி கூட்டிட்டு போனாங்க. எந்த தப்பும் செய்யாத என்னை ஏன் போலீஸ் இப்படி செஞ்சாங்கனு தெரியல

பட்டினப்பாக்கம் காவல் நிலையத்தில் எங்கள் இருவரையும் ஒரு காவலர் போட்டோ எடுத்தார். பிறகு உடனடியாக காவல் ராஜேஸ்வரி ஆய்வாளர் எங்களை யாரோ மூன்று நபர்களிடம் ஒப்படைத்தார். அவர்கள் சிறப்பு பிரிவு காவலர்களாக இருக்க கூடும் என அவர்களின் நடவடிக்கைகளில் இருந்து யூகிக்க முடிந்தது. அவர்கள் எங்களை ஆட்டோ ரிக்ஷாவில் ஏற்றி சென்றனர். ஒரு சிக்னல் அருகே ஆட்டோ ரிக்ஷாவை நிறுத்தி எங்களை அழைத்துச் சென்றவர்களில் ஒருவர் தனது

தொலைபேசியில் எனது தம்பி விக்னேஷின் போட்டோவை காட்டி, 'உனது தம்பி விக்னேஷ் இறந்துவிட்டான்' என்று சொன்னார். ஆனது ஆகிப் போச்சு உன் தம்பி விக்னேஷ் இன்னைக்கு காலையில் பிக்ஸ் வந்து வாமிட்டு எடுத்து இறந்துட்டானு சொன்னார்.

நஇதைக் கேட்டதும் நான் ஷாக்காகிட்டேன். ரெண்டு நாளைக்கு முன்னாடிதான் விக்னேஷ் என்ன வந்து பாத்துட்டுப் போனான். மேலும் அவனுக்கு சின்ன வயசுல இருந்து உடம்புக்கு எந்த பிரச்சனையும் இல்லை அவனுக்கு பிக்ஸ் வந்ததே இல்ல எப்படி இறந்தானு எனக்கு கொழப்பமா இருந்துச்சு. அப்போ கொஞ்ச நேரத்துல எங்களை K2 போலீஸ் ஸ்டேசனுக்கு கூட்டிட்டு போயிட்டாங்க. வண்டிய விட்டு எங்கள இறக்கல. கொஞ்ச நேரம்தான் வண்டி அங்க நின்னுச்சு. அதற்குப் பிறகு எங்களை G5 போலீஸ் ஸ்டேசனுக்கு கூட்டிட்டு போனாங்க. எங்ககிட்ட இருந்த செல்போனை வாங்கிக்கிட்டாங்க ஒரே ரூம்ல நானும் என் தம்பிகளும் இருந்தாலும் எங்க மூனு பேரையும் பேசவுடல.

எங்களை அழைத்துச் சென்ற நபர்கள் காவல் நிலையத்தில் எங்களுக்கு மதிய உணவு வாங்கித் தந்தனர். நான் சிறிது சாப்பிட்டேன். எனது தம்பி சூர்யா சாப்பிடவில்லை. எங்கள் இருவரையும் ஒரு அறையில் உட்கார வைத்து விட்டனர். சில மணி நேரம் கழித்து எனது மற்றொரு தம்பி வீராவையும் அங்கே அழைத்து வந்தனர். பிறகு நெடு நேரம் கழித்து பொழுது போனபிறகு மூன்று போலீசார் மற்றும் ஒரு மேல் அதிகாரி அங்கு வந்தார்கள். வந்த அதிகாரிகளில் ஒருவரின் பெயர் மோகன்தாஸ். அவர் ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தில் ஆய்வாளராக இருந்திருக்கிறார்.

மாலை 4.00 மணி இருக்கும், இன்ஸ்பெக்டர் ரூம்ல ஆயிரம்விளக்கு போலீஸ் ஸ்டேசன் இன்ஸ்பெக்டர் மோகன்தாஸ் இருந்தார். மேலும் யூனிபாம் போடாத எஸ்.ஐ, இவங்களோடு நாலு போலீஸ் இருந்தாங்க. இவர்களை பார்த்தாள் அடையாளம் தெரியும். அப்போ இன்ஸ்பெக்டர் மோகன்தாஸ் என் தம்பி வீராவை பார்த்து நீ மர்டர் கேஸ் அக்கியூஸ்ட் ஆனாலும் உங்கள சமமா உக்கார வைத்து பேசுரேன். நான் சொல்லுறத செய்யல, உன்ன அடிச்சு ரிமாண்ட்

செய்திடுவேன் உன்னோட அண்ணன் முகத்தைக்கூட பார்க்காம சிறையில் இருப்ப என மிரட்டினார். அதுக்கு அப்புறமா யூனிபாம் போடாத எஸ்.ஐ, நடந்தது நடந்து போச்சு பாடியை அடக்கம் செய்வதற்கு பணத்தை வச்சுகோங்கனு சொன்னார்.

அதே நேரத்தில் விக்னேஷ் வேலை செய்துவந்த குதிரையோட முதலாளி ரஞ்சித்திடம் இன்ஸ்பெக்டர் மோகன்தாஸ் ஃபோன் போட்டு அவரிடம் என்னை பேச சொன்னார். 'ஏதோ நடந்துவிட்டது. அதையே பேசிக் கொண்டிருக்காமல் போலீஸ் கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு தம்பியின் உடலை நல்லபடியாக அடக்கம் செய். நான் ஒரு லட்சம் ரூபாய் கொடுக்க சொல்கிறேன்' என்று குதிரையின் ஓனர் ரஞ்சித் சொன்னார். அவர் எங்கள் குடும்பத்திற்கு என்றும் உறுதுணையாக இருந்த மனிதர். குதிரையின் ஓனர் ரஞ்சித் என்னிடம் பேசிய பின்பு ஆட்டோவில் எங்களை அழைத்து வந்த நபர்களில் ஒருவரான யூனிபார்ம் அணியாத அந்த நபர் எஸ்.ஐ என எங்களிடம் சொல்லியிருந்தார். அவர் எங்களப் பார்த்து நீ என்ன எஸ்.சி சமூகமா? என்றார். ஆம் நான் எஸ்.சி தான் என்றேன். நான் போலீஸ் கொடுக்கும் பணத்தை வாங்கவில்லை என்றால் என்னை அந்த இன்ஸ்பெக்டர் மோகன்தாஸ் அடித்தே கொன்றுவிடுவார் என்று தோன்றியது. எனவே அதற்கு பயந்துதான் பணத்தை வாங்கிக் கொள்ளலாம் என முடிவு செய்தேன்.

இன்ஸ்பெக்டர் மோகன்தாஸ் அப்போ 500 ரூபாய் கட்டு ஒண்ணு என்னிடம் கொடுத்தார். அதில் 50,000/- ரூபாய் இருப்பதாக சொன்னார்கள். அதன் பின்பு அரை மணி நேரம் கழித்து மீண்டும் யூனிபார்ம் போடாத எஸ்.ஐ 100, 200, 500 ரூபாய் கட்டு கொடுத்தார் அதில் 50,000/- ரூபாய் இருப்பதாக சொன்னார். மொத்தம் இன்ஸ்பெக்டர் மோகன்தாஸும், எஸ்.ஐ-யும் என்னிடம் கொடுத்த பணம் 1,00,000/- ரூபாய் ஆகும். அந்தப் பணத்துல நான் இதுவரை எந்தச் செலவும் செய்யவில்லை. அந்தப் பணத்தை முதல்வரிடமோ அல்லது நீதிபதியிடமோ கொடுக்கணும்னு முடிவு செஞ்சிருக்கேன்.

இரவு எங்களை தங்க வைக்க ஒரு காரில் மூவரையும் பக்கத்தில் உள்ள ஒரு மேன்ஷனுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு தான் நாங்கள் மூவரும் தூங்கினோம். காலை 10 மணி அளவில் எங்கள் மூவரையும் G5 காவல் நிலையத்திற்கு காரில் அழைத்துச் சென்றார்கள். G5 காவல் நிலையத்தில் நாங்கள் இருந்த போது எனது அத்தை முனியம்மா மற்றும் எனது தம்பிகள் விஜய், சத்யா ஆகியோர் அங்கு வந்தனர். விக்னேஷின் இறப்பு செய்தியை கேட்டு அத்தை, தம்பிகள் சூர்யா, வீரா ஆகியோர் சத்தமாக கதறி அழுது கொண்டு இருந்தனர். இங்கு கூச்சல் போட்டுக் கொண்டே இருந்தால் கைவிலங்கு போட்டு மூலையில் உட்கார வைத்து விடுவோம் என்று ஒரு போலீசார் ஒருவர் அவர்களைப் பார்த்து மிரட்டினார். எங்களை எங்க அத்தை, மாமாவோடு பேச அனுமதிக்கவில்லை.

சற்று அமைதியாக இருந்த என்னையும் எனது மற்றொரு தம்பி விஜய் ஆகிய இருவரையும் காரில் ஏற்றிக்கொண்டு கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஜட்ஜ் அய்யா அவர்கள் உன்னிடம் பேசுவார. போய் பேசிவிட்டு வா' என்று போலீசார் என்னை ஜட்ஜ் ஐயாவிடம் அனுப்பி வைத்தனர். 'என் தம்பி இறக்க வாய்ப்பில்லை. எனக்கு சந்தேகமாக இருக்கிறது' என்று நான் அவரிடம் தெளிவாக கூறினேன். அவர் நான் சொன்னவற்றை குறிப்பெடுத்துக் கொண்டார். பிறகு சில மணி நேரம் கழித்து எனது தம்பி விக்னேஷின் உடலை எனக்கு மட்டும் காட்டினர். விக்னேஷின் உடல் முழுக்க காயங்கள் இருந்தன. குறிப்பாக முகத்தில் தோள்பட்டையில், இரண்டு கைகளின் விரல் முட்டிகளில் காயங்கள் இருந்தன. தாடை உடைந்து இடம் மாறி இருந்தது. நான் எனது தம்பியின் உடலைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது ஜட்ஜ் உடன் இருந்தார் மற்றும் போலீஸ் ஒருவர் இருந்தார். மேலும் ஒருவர் அதனை வீடியோ படம் எடுத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது மிகுந்த கோபத்தில் இருந்த நான் 'இதனை சும்மா விட மாட்டேன். பத்திரிக்கையாளர்களிடம் சொல்லியே தீருவேன்' என்றேன். அப்பொழுது போலீஸ் ஒருவர் என்னை பார்த்து. 'உனது தம்பி தனது இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து எங்களை குத்த வந்த காரணத்தினால் தான் நாங்கள் அவனை அடித்தோம். அவன் செத்து விட்டான். என்ன பண்றது? என்றார். மேலும் அவர்

விக்னேஷின் உடலை எரிக்க வேண்டும் என்றார். நான் எனது தம்பியின் உடலை பார்த்து அதிர்ச்சியில் அழுது கொண்டிருந்தேன். 'எதற்காக எரிக்க வேண்டும்? புதைப்பது தான் எங்கள் வழக்கம். ஆகையால் எரிக்க முடியாது' என்று சொன்னேன். மீறி எரித்தால் நான் தற்கொலை செய்து கொள்வேன் என்று கூறினேன். ஆனாலும் மீண்டும் மீண்டும் அங்கிருந்த போலீசார் அழுத்தம் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். இதனால் நான் ஜட்ஜ் ஐயாவைப் பார்த்து, எனது தம்பியின் உடலை புதைக்க வேண்டும் அதற்க்கு நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டேன்.

போஸ்ட்மார்ட்டம் முடிந்த பின்பு மாலை 4.00 மணியளவில் சில பேப்பரில் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள். எனது தம்பியின் உடலை எங்களிடம் போலீஸ் ஒப்படைக்கவில்லை. எனது உறவினர்கள் யாரையும் விக்னேஷின் உடலை பார்க்க அனுமதிக்கவில்லை. எனது அத்தை, மாமா மற்றும் இரண்டு தம்பிகள் ஆகியோரை போலீஸ் அவர்கள் காரில் அழைத்துக்கொண்டு கிருஷ்ணாம்பேட்டை சுடுகாட்டுக்கு அழைத்துச் சென்றனர். எங்கள் இருவரையும் தனியாக ஜீப்பில் போலீசார் சுடுகாட்டுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு ஏற்கனவே சுடுகாட்டில் போலீசார் குவிந்திருந்தனர். என் தம்பிக்கு எந்த சடங்கும் செய்ய எங்களை அனுமதிக்கவில்லை. என் தம்பியின் முகம் பார்த்து அழுவதற்கு கூட அனுமதிக்கவில்லை. அவசர அவசரமாக உடலை புதைத்துவிட்டு சென்றனர். மேலும் என் தம்பியை புதைப்பதற்கு அனைத்து செலவுகளையும் போலீசாரே செய்தனர். சுடுகாட்டில்தான் எனது அத்தை மாமா மற்றும் உறவினர்கள் விக்னேஷின் உடலை முதன் முதலாக பார்த்தனர். அடக்கம் செய்த போது சுமார் மாலை 5.00 மணி இருக்கும். அடக்கம் முடிந்த பிறகு நாங்கள் அனைவரும் வீட்டிற்கு நடந்தே போனோம். போலீசார் சுடுகாட்டிலேயே இருந்தனர்.

மறுநாள் காலை சுமார் 8.00 மணிக்கு என்னிடம் பணம் கொடுத்த அந்த எஸ்.ஐ, செல்போனில் என்னை அழைத்து, 'எங்க தம்பி இருக்கிற? வழக்கில் சம்மந்தப்பட்ட ஆட்டோ டிரைவர காணோம். அவரை கண்டுபிடிக்க உதவி செய்ய வேண்டும். வருகிறாயா?' என்று அழைத்தார். "எனது தம்பியின் உயிர்

போய்விட்டது. இனிமேல் யாரைப் பிடித்து என்ன ஆகப்போகிறது" என்று நான் மறுத்துவிட்டேன்.

போலீசினால் எனது உயிருக்கும் ஆபத்து என்று நான் கருதுவதால் நான் தற்போது பாதுகாப்பான ஒரு இடத்தில் இருக்கிறேன். எனது தம்பி விக்னேஷை அடித்து சாகடித்த போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கும் எனது தம்பிகளுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும். என்று கூறினார்.

## பிரபு (40) த/பெ குணசேகரன் வாக்குமூலம்

## (சம்பவ சாட்சியின் வாக்குமூலம்)

எனது பெயர் பிரபு (40) அப்பா பெயர் குணசேகரன் நான் ஆட்டோ டிரைவராக பணியாற்றி வருகிறேன். நான் ஆதிதிராவிடர் சமூகத்தை சேர்ந்தவன். மேலும் கதவு எண் 80, பிளாக் எண் 150, பெரும்பாக்கம் சென்னை 100. என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எனது மனைவி பெயர் கீதா. எங்களுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளது. எனது மூத்த மகள் சரண்யா (21) பன்னிரெண்டாம் வகுப்பு முடித்துவிட்டு தற்சமயம் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறார். இரண்டாவது மகள் (20) புஷ்பாவிற்கு திருமணம் நடந்து விட்டது. மூன்றாவது மகன் தமோதரன் (18) பத்தாம் வகுப்பு வரை படித்து விட்டு இப்போது பைக் கம்பெனியில் வேலை செய்து வருகிறான்.

18.04.2022 அன்று இரவு சுமார் 10.45 மணியளவில் திருவல்லிக்கேணியிலிருந்து ரெட்டேரிக்கு சவாரிக்கு போய் விட்டு ரிட்டன் வரும் போது, பாடி பிரிஜ்க்கு கீழே எனது ஆட்டோவை நிறுத்தச் சொல்லி ஒருவர் கை போட்டார் நான் உடனே ஆட்டோவை நிறுத்தினேன். அப்போது ஏற்கனவே எனக்கு அறிமுகமான திருவல்லிக்கேணியை சேர்ந்த சுரேஷ் என்பவனும், விக்னேஷ் என்பவனும் நின்று கொண்டிருந்தார்கள். நான் சுரேஷை பார்த்து என்னடா இங்கேனு கேட்டேன். ஒரு வேளையா வந்தேன். என்னை GHல, விட்டுனு கேட்டான். அதனால் நான் இருவரையும் ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு வந்தேன். அப்போது கெல்லிஸ் சிக்னலிடம் ஆட்டோ ஓட்டிக் கொண்டு நான் வரும் போது போலீசார் ஆட்டோவை நிறுத்தச் சொல்லி கைகாட்டினார்கள். உடனே நான் ஆட்டோவை நிறுத்தினேன். அப்போது மணி இரவு 11.00 இருக்கும்.

ஆட்டோ நின்ற இடத்தில் எஸ்.ஐயோடு ஒரு போலீசார் இருந்தார். எஸ்.ஐ என்னைப் பார்த்து எங்க இருந்து இட்டு வர்ற என்று கேட்டார். நான் பாடி பிரிட்ஜ்ல இருந்து இட்டு வர்னு சொன்னேன். எங்க போறனு கேட்டார் GHக்கு போறேன்னு

சொன்னேன். பின்னாடி உட்கார்ந்து இருக்கிற ரெண்டு பேரை உணக்கு தெரியுமானு கேட்டார். இல்லை சவாரி சார்னு சொன்னேன். அடுத்து ஆட்டோவில் உட்காந்திருந்த இருவரையும் விசாரித்தார் எஸ்.ஐ. அப்போ சுரேஷ் அவனது காலைக் காட்டி, காயம் அதனால GH-க்கு போறோம்னு சொன்னான். பெயர் என்னனு கேட்டார்; ரமேஷ் என பெயரை மாற்றிச் சொன்னான். உடனே எஸ்.ஐ, முகத்துல போட்டிருக்கிற மாஸ்க்கை எடுக்க சொன்னார். சுரேஷ் மாஸ்க் எடுத்தவுடன் எஸ்.ஐ தனது செல்போன் மூலமா போட்டோ எடுத்தார். உடனே சுரேஷின் உண்மையான பெயர் அவன் மீது இருந்த வழக்கு சம்பந்தமான அனைத்து தகவலும் செல்லில் வந்து விட்டது.

சுரேஷை எஸ்.ஐ சோதனை செய்தார். அவனிடம் எதுவும் இல்லை. அதன்பின் விக்னேசை சோதனை செய்தபோது இருப்பிலிருந்து கத்தியை எடுத்தார். அதன்பின் கெல்லிஸ் சிக்னல் அருகாமையில் மெட்ரோ மற்றும் வசந்த் அன் கோவிற்கு பந்தல் போடும் வேலை நடந்து கொண்டிருந்த இடத்தில் கிடந்த சவுக்கு உருட்டு கட்டையை எடுத்து எஸ்.ஐ மற்றும் போலீஸ் ஒருவர் பெயர் தெரியாது பார்த்தால் அடையாளம் தெரியும். இருவரும் விக்னேசை அடித்தார்கள். அதன்பின் போலீஸ் ஒருவருக்கு போன் பண்ணி வரச் சொன்னங்க. கொஞ்ச நேரத்திற்கு பிறகு ஒரு போலீச்காரர் வந்தார். அவர் வந்த பின்பு மூன்று பெரும் சேர்ந்து மாறி மாறி அடித்தார்கள். அப்போது சார் என்னை அடிக்காதீங்க; நான் எந்த தப்பும் செய்யவில்லை வலிக்குது எனக் கத்தினான். ஆனால் அவர்கள் விக்னேசின் கதறலை கண்டுகொள்ளவில்லை. சுமார் அரை மணி நேரம் கழித்து, ஒரு போலீஸ் வண்டி வந்தது. அதிலிருந்து இறங்கிய வந்த ரெண்டு போலீஸ் உருட்டுக் கட்டையால் விக்னேஷை அடித்தார்கள். இதே நேரத்தில் சுரேஷையும் அடித்தார்கள். விக்னேஷை அடித்த அளவிற்கு சுரேஷை போலீசார் அடிக்கவில்லை. ஏனென்றால் சுரேஷுக்கு ஏற்கனவே காலில் காயம் இருந்ததால் என நான் யூகிக்கிறேன். தொடர்ந்து விக்னேஷையும் சுரேஷையும் போலீசார் இரவு

சுமார் 2.00 மணி வரை அடித்தார்கள். இதனால் இருவரும் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. போலீஸ் அடித்ததில் நாலு உருட்டுக்கட்டைகள் உடைந்து விட்டது.

இரவு சுமார் 2.00 மணியளவில் போலீஸ் வண்டி வந்தது. நடக்க முடியாத நிலையில் இருந்த விக்னேஷையும், சுரேஷையும் போலீஸ் வண்டில் தூக்கிப் போட்டார்கள். என்னையும் ஸ்டேசனுக்கு வரச் சொன்னார்கள். நான் ஆட்டோவை எடுத்துக் கொண்டு போலீஸ் வண்டி பின்னாடியே K 2, போலீஸ் ஸ்டேசனுக்கு போனேன். அங்க போலீஸ் ஸ்டேஷனே இருட்டா இருந்தது. ஒரு லிப்டுல ஏறி மாடிக்கு கூட்டிட்டு போனாங்க. சுரேஷையும் விக்னேஷையும் லாக் அப்ல போட்டாங்க. அதன் பின் என்னிடம் எங்கிருந்து சவாரி வந்த, இவர்கள் இருவரையும் ஆட்டோவில் எங்கே ஏற்றின என்ற விபரத்தை போலிசார் ஒருவர் பேப்பரில் எழுதிக் கொடு என்று என்னிடம் கிட்டார். நான் எழுதத் தெரியாது என்று சொன்னேன். உடனே அவரே பேப்பரில் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார். அதன்பின் என்னையும் எனது ஆட்டோவையும் போட்டோ எடுத்துக் கொண்டார்கள். லைசென்சு கேட்டார்கள். நான் வீட்டில் இருப்பதாக சொன்னேன். K2 போலீஸ் ஸ்டேசனில் 19.04.2021 காலை சுமார் 3.10 மணி வரை நான் இருந்தேன். நான் ஸ்டேசனில் இருந்து கிளம்பும் போதும் விக்னேஷையும், சுரேஷையும் லாக்கப்பில் போட்டிருந்ததைப் பார்த்தேன்.

நான் காலை சுமார் 10.30 மணியளவில் சுரேஷ் அம்மா கற்பகத்தை திருவல்லிக்கேணியில் வைத்து பார்த்து சுரேஸ் K2, போலீஸ் ஸ்டேசனில் இருக்கிற விபரத்தை சொன்னேன். உடனே கற்பகம் ஸ்டேசனுக்கு கூட்டிட்டு போகச் சொன்னாங்க நான் K2 ஸ்டேசனுக்கு கூப்பிட்டு போனேன். ஆனால் நான் K2 ஸ்டேசன் பக்கத்தில் கற்பகத்தை விட்டு விட்டு நான் அயனாவரம் டிப்போ பஸ்டாண்டு கிட்ட போய் உட்காந்து கொண்டேன். சுமார் ஒரு மணி நேரம் கழித்து வந்த கற்பகம், எப்பா ஸ்டேசன்ல சுரேஸ் இல்லன்னு சொன்னாங்க. நானும் திரும்பத் திரும்ப போலீஸ்கிட்ட கேட்டேன். போலீஸ் கடைசிவரைக்கும் இல்லைன்னு சொல்லி என்னை போக சொல்லிட்டாங்கப்பா. அதனால நான்

வந்துட்டேன்னு சொன்னார். அப்போ நான்தான் நைட்ல ஸ்டேசன்ல சுரேசையும் விக்னேசையும் விட்டுட்டு வந்தேன். போலீஸ் பொய் சொல்லுது என்று சொன்னேன். அதுக்கப்புறம் வேறு வழியில்லாம வீட்டுக்கு திரும்பிட்டோம். எனக்கு மனசு கஸ்டமா இருந்தது. நைட்ல தூக்கமே வரல. நேத்து என் ஆட்டோவுல உயிரோட வந்த விக்னேஷ் என்ற பையனை போலீஸ் அடிச்சு கொன்னுட்டாங்க இதை நான் எங்க வேணும் என்றாலும் சொல்வேன் என்று தெரிவித்தார்.

## கற்பகம் (51), க/பெ. கணேசன், வாக்குமூலம்
## (சித்திரவதையால் பாதிக்கப்பட்ட ஆட்டோ டிரைவர் சுரேசின் அம்மா)

எனது பெயர் கற்பகம் (51). கணவர் பெயர் கணேசன். நான் ஆதிதிராவிடர் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவள். 144/51, விக்டோரியா விடுதி பின்புறம், திருவல்லிக்கேணி, சென்னை என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எங்களுககு சுரேஷ் (28), சுரேந்தர் (26), தீபா (22) என மூன்று பிள்ளைகள் உள்ளனர். இதில் தீபா இறந்து போன விக்னேசின் அண்ணன் விஜய் என்பவரை திருமணம் செய்துள்ளார். நான் தெருவோரம் பூ விற்கும் வேலை செய்கிறேன். எனது கணவர் ரிக்ஷா ஓட்டி வருகிறார்.

19.04.2022 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் எங்கள் பகுதியைச் சேர்ந்த பிரபு (40) த/பெ. குணசேகரன் ஆட்டோ டிரைவரான இவர் என்னைப் பார்த்து, நேற்று நான் ரெட்டேரிக்கு சவாரி போய் வரும் போது, உன் மகன் சுரேஷ் மற்றும் விக்னேஷ் ஆக இரண்டு பேரும் பாடி பிரிட்ஜில் என் ஆட்டோவில் ஏறினார்கள். கெல்லிஸ் சிக்னலாண்ட வரும்போது, போலீஸ் வழி மறித்து, அடித்து, கூட்டு போய் K2 ஸ்டேசன்ல வச்சிருக்காங்க என்றார். உடனே நான், ஆட்டோவுக்கு துட்டு தர்ரேன், நீ சொல்ற போலீஸ் ஸ்டேசன் எனக்குத் தெரியாது. நீயே என்னை கூப்பிட்டு போ என்று சொன்னேன். அதற்கு ஆட்டோக்காரரும் சரின்னு சொல்லி என்னை 19.04.2022 ஆம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு K2 போலீஸ் ஸ்டேசன் பக்கத்துல போய் விட்டார். ஆனால் ஆட்டோக்காரர் பிரபு (40) த/பெ. குணசேகரன் போலீஸ் ஸ்டேசன் வந்தா பிடிச்சுடுவாங்கன்னு பயந்து ஸ்டேசனுக்குள்ள வரலை.

நான் K2 போலீஸ் ஸ்டேசனுக்கு உள்ள போனேன். அங்கு ரெண்டு, மூணு போலீஸ் இருந்தாங்க. எனக்கு அவங்க பேரெல்லாம் தெரியாது. என்ன பொறுப்பெல்லாம் தெரியாது. பார்த்தா அடையாளம் சொல்வேன். அங்கிருந்த ஒரு போலீஸ்காரரிடம் நான் சுரேஷ் அம்மா; என் மவன் சுரேஷை நேத்து நைட்ல

போலீஸ் பிடிச்சு வந்து இங்க வச்சிருக்காங்க. அவனை பார்க்கணும் சார்னு கேட்டேன். அந்த போலீஸ் அப்படியெல்லாம் யாரும் இங்க இல்ல. உடனே நீ கிளம்புன்னு சொன்னார். எனக்கு உடனே கிளம்ப தயக்கமா இருந்தது. ஆட்டோ டிரைவர் பிரபு என்னிடம் பொய் சொல்ல மாட்டாரேன்னு நெனச்சு மீண்டும் இன்னொரு போலீசிடம் கேட்டேன். அவரும் சுரேஷ்னு யாரும் இங்கு இல்லைன்னு சொன்னார். சுமார் ஒரு அரை மணி நேரம் ஸ்டேசனில் காத்திருந்தேன். எந்தப் பதிலும் இல்லை. அதனால் வீட்டுக்குத் திரும்பிட்டேன்.

நான் வீட்டுக்கு வந்தப்புறம் என் பையனும் வீட்டுக்கு வரலை. அடுத்த நாள் காலையில் நான் பூ வித்துக்கிட்டு இருந்தபோதுதான் எங்க ஏரியாப் பையன் ஒருத்தன் பேப்பரில் விக்னேஷ் மூச்சுத் திணறி செத்ததாக பேப்பரில் போட்டதாக அவனுடைய செல்போன்ல காட்டினான். இதைப் பார்த்ததும் நான் மயங்கி விழுந்துட்டேன். அப்புறமா அக்கம் பக்கத்தில இருக்கிறவங்க எனக்கு தண்ணி கொடுத்து எழுப்பினாங்க. பிறகு சுரேஷ் ஜெயிலுக்கு போனதா கேள்விப்பட்டேன். அதனால 26.04.2022 அன்றைக்கு புழல் சிறைக்கு போய் சுரேஷை பார்க்க மனு போட்டேன். நாளைக்கு வரச்சொல்லிட்டாங்க. அதனால் நான் வீட்டுக்கு திரும்பிட்டேன் என்று சொன்னார்.

## கண்டறிந்தவைகள்

## விக்னேஷ் சார்ந்த மனித உரிமை மீறல்கள்

1. கடந்த 18.04.2022-ம் தேதி இரவு 11.00 மணியளவில் கெல்லீஸ் பகுதியில் விக்னேஷ், சுரேஷ் ஆகியோரை 3 காவலர்கள் அவர்கள் வந்த ஆட்டோவை நிறுத்தப்பட்ட பிறகு அடுத்த நாள் 2.00 மணி வரை தொடர்ச்சியாக கொடூரமாக நடத்தப்பட்ட சித்திரவதை என்பது கைகளாலும், கம்புகளாலும் உடலில் பல பாகங்களில் அடித்து காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது இந்திய உச்சநீதிமன்ற பல தீர்ப்புகளுக்கு எதிராகவும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைக்கு எதிரான பிரகடனத்திற்கு எதிராகவும் நடந்தசித்ரவதையாகும். இந்த சித்திரவதை சட்டத்துக்கு புறம்பாக கொடூர குற்றம் அதை புரிந்தவர்கள் இவர்கள் இருவரையும் ஆட்டோ டிரைவர் பிரபு அவர்களையும் சம்பவ இடத்தில் நிறுத்தியதோடு மட்டுமல்ல அதற்கு பின்பு இதை கேள்விப்பட்டு வந்து சித்ரவதைகளில் ஈடுபட்ட மற்ற இரு காவலர்களும் பொறுப்பாவார்கள்.

   18.04.2022 அன்று இரவு சுமார் 11 மணிக்கு சுரேஷ் விக்னேஷ் இருவரும் காவலில் எடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டதை விக்னேஷ் குடும்பத்தை சார்ந்த உறவினர்களுக்கு அல்லது சுரேஷ் குடும்பத்தை சார்ந்த உறவினர்களுக்கு காவல்துறை தெரிவிக்கவில்லை.

2. அவர்கள் கைது செய்யப்பட்ட இடத்தில் (கெல்லீஸ்) இருந்தே K-2 அயனாவரம் காவல்துறை ஆய்வாளர் தனது சொந்த தனியார் வாகனத்தில் வந்து பார்த்தார். ஆகவே இந்த இரவில் சாலையில் சுமார் 3½ மணிநேரம் நடந்த சித்திரவதை என்பதால் இரவு ரோந்துக்கு பொறுப்பாக உள்ள காவல் ஆய்வாளர், காவல் உதவி ஆணையர் மற்றும் காவல் துணை ஆணையர் ஆகியோருக்கு தெரியாமல் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் இல்லை. சட்ட விதிமுறைகளுக்கு எதிரான கைது சித்திரவதை என்பதும்

ஏன் இரவு ரோந்துப்பணி காவல்துறையினருக்கும் அறிந்தே நடந்துள்ளது. ஆகையால் இந்த மனித உரிமை மீறலுக்கு அவர்களும் பொறுப்பேற்க கடமைப்பட்டவர்கள். அவர்களும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3. சட்டசபை நடந்து கொண்டிருக்கும்போது நெறிமுறை (Protocol) என்னவென்றால் மாநிலத்தில் செயல்பாட்டில் உள்ள நான்கு காவல்துறை மண்டலங்களுக்கு பொறுப்பாக இருக்கக்கூடிய காவல்துறைத் தலைவர்களுக்கு அவர்கள் எல்லைக்குட்பட்ட எந்த காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்டாலும் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இந்த சம்பவத்தில் சென்னை மாநகர காவல் எல்லைக்குள் நடந்ததால் சென்னை மாநகர காவல் ஆணையர் திரு.சங்கர்ஜுவால் அவர்களும் பொறுப்பேற்க வேண்டும். இந்த கைதில் உச்ச நீதிமன்ற நீதிபதி டி.கே.பாசு அவர்களின் தீர்ப்பின் பல கட்டளைகளுக்கு முரணாகவும், தேசிய மனித உரிமை ஆணையத்தின் கைது சம்பந்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு (Guidelines) முரணாகவும், குறிப்பாக குற்றவியல் நடைமுறைச் சட்டம்-1973-ன் பிரிவு 41B, 41C, 41D, 46, 50A மற்றும் 60A கீழ் மீறலாகும்.

4. 19.04.2022 அன்று காலை சுமார் 3 மணிக்கு K2 அயனாவரம் காவல் நிலையத்தில் நடக்க முடியாத நிலையில் K2 அயானாவரம் காவல் நிலையத்தில் இருக்கும் லிப்டை பயன்படுத்தி முதல் தளத்திற்கு கொண்டு செல்லும் போது ஆட்டோ டிரைவர் பிரபுவும் உடனிருந்தார். இவர்கள் இருவருக்கும் காயங்கள் இருப்பது தெரிந்தும் குற்றவியல் நடைமுறை சட்டத்துக்கு முரணாக மேலே குறிப்பிடக்கூடிய உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு முரணாக தேசிய மனிதஉரிமை ஆணையத்தின் தீர்ப்புக்கு எதிராக Police Standing Order-க்கு முரணாக இவர்களை மருத்துவ சிகிச்சைக்கு உடனடியாக கொண்டுபோகாமல் K2 அயனாவரம் காவல் நிலையத்தில் உள்ள ஒரு அறையில் வைத்திருந்தது சட்டத்துக்கு

புறம்பான மனித உரிமை மீறல் ஆகும். அப்பொழுதும் தங்களுடைய உறவினர்களுக்கும் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்ட தகவல் K2 அயனாவரம் காவல் நிலையத்தில் பொறுப்பாக இருக்கும் காவலர்கள் கொண்டுசெல்லாதது மேலும் உரிமை மீறல் ஆகும்.

5. காவல் நிலையத்தில் அவர்களுக்கு தொடர் சித்திரவதை நடத்தப்பட்டுள்ளது. காவலில் எக்காரணத்துக்கு என்று தெரியாமல் காயங்களுடன் இருக்கும் விக்னேஷை காலை உணவு முடிந்தவுடன் K2 அயனாவரம் காவல் நிலையத்திலிருந்து G-5 தலைமைச் செயலக காவல் நிலையத்திற்கு கொண்டுசென்று அங்கும் சித்திரவதை செய்ததின் விளைவாக G-5 தலைமை செயலக குடியிருப்பு காவல் நிலையத்தில் அவர் உடல்நலம் மிக மோசமான நிலையில் எந்த தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்ற தகவலை காவல்துறையினரின் பத்திரிகைச் செய்தியில் வெளியிடாமல், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது, இறந்துவிட்டார் என்பது மேலும் தொடரும் மனித உரிமை மீறலாகும்.

விக்னேஷ் G5 காவல் நிலையத்தில் இறந்த பிறகு, K2 காவல் நிலையத்தில் இருந்த சுரேஷ், G5 காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறார்.

6. விக்னேஷ் இறந்ததற்கு பின்புதான் தகவல் தெரிந்து K2 அயனாவரம் காவல் நிலையத்திற்கு ஆட்டோ டிரைவர் பிரபுவுடன், சுரேஷின் தாயார் கற்பகாம்மாள் காலை சுமார் 10.30 மணிக்கு சென்று கேட்டபோது, சிறிது நேரம் வரை காத்திருக்க வைத்து, அவர் அங்கு இல்லை என தாய்க்கு பதிலளித்தது அப்பட்டமான மனித உரிமை மீறல் ஆகும்.

7. கடந்த 19.04.2022 அன்று சுரேஷை மருத்துவர் முன் ஆஜர் செய்தார்களா? அவர் உடம்பில் உள்ள காயங்கள் மருத்துவர்களால், மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்டதா? உடலில் உள்ள

காயங்களுக்கு முறையான மருத்துவ சான்று பெறப்பட்டதா? மேற்படி மருத்துவரின் அறிக்கைகளுடன் சென்னை பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் அறிக்கையுடன் ஆஜர்படுத்தப்பட்டாரா? பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவரின் ரிமாண்டு அறிக்கையில் இந்த தகவல்கள் கூறப்பட்டுள்ளதா? காயங்கள் இருப்பதை அறிந்து பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் அவற்றை குறிப்பிடாதது சாத்தான்குளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் சரவணன் செய்ததற்கு சமமாகும். கைது செய்யப்பட்ட ஒருவர் தன் முன் ஆஜர் படுத்தப்படும்போது கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படவில்லை. இச்செயல் இன்றளவும் தொடர்கிறது. சென்னை உயர்நீதிமன்றத்தின் கண் பார்வையிலேயே இருக்கக்கூடிய சென்னை பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் இது நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

8. 19.04.2022 அன்று சுரேஷை II மத்திய சிறைக்கு கொண்டு சென்றபோது அவருக்கு உரிய சிகிச்சை தேவை என்பதை அறிந்தும் அவரை ஸ்டான்லி மருத்துவமனைக்கோ அல்லது பிற உயர் மருத்துவமனைக்கோ 19 தேதியில் இருந்து 27 இரவு வரை கொண்டு செல்லாமல் இருந்ததற்கு அந்த சிறையின் கண்காணிப்பாளர் மற்றும் அந்த சிறையை மேற்பார்வையிடும் சிறைத்துறை துணைத் தலைவர் (DIG) பொறுப்பேற்கவேண்டும்

9. சுரேஷுக்கு உயர் தரமான மேல் சிகிச்சை அளிக்க வேண்டும் என்று கடந்த 26.04.2022 அன்று சட்டசபையில் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த செய்தி அனைத்து பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளில் வெளிவந்த பிறகும் கூட 27.04.2022 அன்று இரவு வரை அவர் ஸ்டான்லி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படாமல் இருந்ததற்கு சிறைத்துறை அதிகாரிகள் மட்டுமல்லாது சிறைத்துறை இயக்குனர்

அவர்களும் சட்ட நெறிமுறைப்படியும் தார்மீக முறைப்படியும் பொறுப்பேற்கவேண்டும்.

10. அதேநாளில் (19.04.2022) விக்னேஷ் மரணமடைந்த பிறகு அவர் தம்பி விஜயின் வீடு உரிமையாளரை மிரட்டி, விஜய் குடியிருப்பதைக் காலி செய்ய வைத்து, பின் விக்னேஷ் அண்ணன் வினோத் அவருடைய இல்லத்தில் குளித்துக்கொண்டிருக்கும் நிலையிலேயே பட்டினப்பாக்கம் காவல் ஆய்வாளர் திருமதி. ராஜேஸ்வரி குறைந்தபட்ச தனிமனித அந்தரங்க உரிமையை மதிக்காமல் (Privacy) மீறி சோப்பு போட்டு தண்ணீர் ஊற்றாமல், அப்படியே மிரட்டி ஆடைகளை அணியச்சொல்லி அவரை ஒரு குற்றவாளியை அழைத்து செல்வது போல், அவர் வாழும் பகுதியில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி மனிதாபிமானமற்ற செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளார் என்பது தெளிவாகிறது. இவர்களுக்கு காவல் துறையில் பயிற்சி கொடுத்தவர்கள் யார்? அவர் குடும்பத்தில் ஒருவரான தம்பி இறந்துகிடக்கிறார் என்ற தகவல்கூட தராமல் கைது செய்த பட்டினப்பாக்கம் காவல் ஆய்வாளர் ராஜேஸ்வரியும் அவருடன் வந்த காவலர்களும் நடந்துகொண்டது கண்டனத்திற்குரியது, தண்டிக்கப்பட வேண்டியது. இது ஒரு மனித உரிமைக் குற்றமாகும்.

11. பட்டினப்பாக்கம் காவல் நிலையத்தில் (அங்கேயும்) தம்பி இறந்து விட்டார் என்பதை கூற மறுக்கும் அறுகதையற்ற காவல் ஆய்வாளராக ராஜேஸ்வரி இருக்கிறார். அந்த காவல் நிலையத்தில் உள்ள General Diary (GD)-யில் அவருடைய வருகை பதிவு செய்யப்பட்டுள்ளதா? அந்த காவல் நிலையத்தில் இருந்து சீருடை அணியாத 3 காவலர்கள் யார்? இவர்கள் சென்னை பெரு நகர நுண்ணறிவு பிரிவு (IS) உறுப்பினர்களா? அங்கேயிருந்து ஒரு தனியார் ஆட்டோவில் கொண்டு செல்லும்போது அந்த மூவரில் ஒருவர்தான் இந்த காவல் நிலையத்தில் இறந்த விக்னேஷ் புகைப்படத்தை வினோத்திடம் காட்டி தகவல் தெரியப்படுத்துவதுதான்

முறையா? வினோத்தையும் அவன் தம்பியையும் பட்டினப்பாக்கம் காவல் நிலையத்தில் இருந்து G5 தலைமைச் செயலக குடியிருப்பு காவல் நிலையம் வரை கொண்டு சென்று அவர்கள் அங்கிருக்கும்போது பல மணிநேரங்களுக்கு பிறகு இரண்டு தம்பிகளையும் அழைத்துவந்து அவர் இறந்த சகோதரர் விக்னேஷ் முகத்தை காட்டுவதற்கு முன்னே மிக கேவலமாக காவல் துறைக்கு தலைகுனிவை ஏற்படுத்தும்வகையில் மாண்புமிகு முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டுசெல்லாத அந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலினுக்கு தெரியாமல் ஒரு செயல் நடந்திருக்கிறது.

12. F-4 ஆயிரம் விளக்கு காவல் நிலைய ஆய்வாளர் திரு. கே. மோகன்தாஸ் 19.04.2022 அன்று G-5 காவல் நிலையத்திற்கு அவரும் பட்டினப்பாக்கத்தில் இருந்த வினோத்தையும் அவரது சகோதரரையும் அழைத்து வந்தார். அங்கு வைத்து ஆய்வாளர் திரு. மோகன்தாஸ் 500 ரூபாய் நோட்டுகள் கொண்ட ரூ. 50,000/- (ஐம்பதாயிரம் ரூபாய்) பணத்தை வினோத்திடம் கொடுத்துள்ளார். சீருடையில்லாத காவலர்களில் ஒருவர் ரூ.100/- ரூ.200/- ரூ.500/- நோட்டுகள் கொண்ட ரூ. 50,000/- (ஐம்பதாயிரம் ரூபாய்) கொண்ட இரண்டு கட்டுக்களை வினோத்திடம் கொடுத்துள்ளார். அதை கொடுக்கும்போது வினோத் அதை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே, விக்னேஷ் பணி செய்யும் குதிரையின் உரிமையாளர் ரஞ்சித்தை தொலைபேசியில் பேச வைத்து, இந்த பணத்தை பெற்றுக்கொண்டு ஈமச்சடங்குக்கு பயன்படுத்திட அறிவுரை செய்ய வைத்த ஆய்வாளர் மோகன்தாஸின் செயல் மாநகர காவல்துறை ஆணையருக்கு தெரியாதா? காவல்துறை ஆணையருக்கு உளவுத்துறையினர் சொல்லவில்லையா? காவல் ஆணையருக்கு தெரியாமல் நடந்ததா? வெவ்வேறு துப்பறியும் செயல்களில் ஈடுபடும் நுண்ணறிவு பிரிவு ADGP-க்கும் இது தெரியாதா? அல்லது தெரிந்தே

முதலமைச்சருக்கு சட்டசபையில் தவறான தகவல் கொடுத்து பேச வைத்தார்களா?

13. கடந்த 19.04.2022 அன்று இரவில் இருந்து G5 காவல் நிலையத்தின் கட்டுப்பாட்டில், சடடத்துக்கு புறம்பாக, வைக்கப்பட்டிருந்த விக்னேஷ் சகோதர்கள் இருவரையும் இறந்த சகோதரர் உடலை பார்க்க அனுமதிக்காமல் இந்த நாட்டில் பெற்றோர் இல்லா / தங்கும் இடமில்லா / ஆதார் கார்டு இல்லா / குடும்ப அட்டை இல்லா / ஏன் வாக்களிக்கும் அடையாள அட்டை இல்லா ஒரு SC பறையர் வகுப்பை சார்ந்த ஒரு குடும்பத்திற்கு தமிழக காவல்துறை தலைநகர் சென்னையிலேயே கொடுக்கக்கூடிய உச்சகட்ட அவமரியாதை இதுதானா? இவையனைத்தும் மாண்புமிகு முதலமைச்சரின் மகன் சட்டமன்ற உறுப்பினர் திரு உதயநிதி ஸ்டாலின் தொகுதிக்குள் நடக்க அனுமதித்தது யார்?

14. கடந்த 20.04.2022 அன்று காலையில்தான் கீழ்பாக்கம் பிணவறைக்கு அவர்கள் அனுப்பப்பட்டு குடும்பத்தில் அனைவருக்கும் மூத்த சகோதரனான வினோத்தை மட்டும் ஏற்கனவே காவல் நிலையத்தில் அவரது செல்போன் பறிக்கப்பட்ட நிலையிலேயே அவரது தம்பி உடலை பார்க்க மட்டுமே அனுமதிக்கப்பட்டார். புகைப்படம் எடுக்க அனுமதிக்கப்படவில்லை.

குடும்பத்தினர் பார்ப்பதற்கும் பார்த்த உடலை திருப்பிப்போட்டு புகைப்படம் எடுப்பதற்கும் உயர்நீதின்றம் கட்டளையிட்டும் அருகாமையில் இருந்த மெட்ரோபாலிட்டன் நடுவர் இங்கர்சால், அந்த தீர்ப்பின்படி அனைத்து தம்பிகளும் உடலை பார்ப்பதற்கும் புகைப்படம் எடுப்பதற்கும் புரட்டிப்பார்த்து புகைப்படம் எடுப்பதற்கும் அறிவுரை கூறாமல் இருந்தது ஏன்? இது உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு அவமதிப்பு செய்யும் செயல் அல்லவா? பிணக்கூராய்வுக்கு பிறகு மேற்குறிப்பிட்ட அதே தீர்ப்பில் கூறியபடி போஸ்ட்மார்ட்டம் அறிக்கையையும், வீடியோ

கிளிப்பிங்ஸ் நகலையும், குடும்பத்தாருக்கு கொடுத்து அவர்கள் நம்பும்படியாக அனுமதிக்கப்படவேண்டும். காரணம் முன்கூட்டியே காவல் துறை அவர் செல்போனை கைப்பற்றிவிட்டது.

15. கடந்த 18.04.2022 அன்று நடந்த கொடூர சம்பவம் 26 ஆம் தேதி வரை ஆறு நாட்கள் சட்டசபையில் எதுவும் பேசப்படாதது ஏன்? தமிழ்நாடு ஆளுநர் இரவி பாதுகாப்பு சார்ந்த பிரச்சனைகளைப் பற்றிப் பேச எதிர்கட்சிகள் நடவடிக்கை எடுத்த போதும், விக்னேஷ் காவல் மரணம் பற்றி பேச சபாநாயகர் அனுமதி கொடுக்காதது, காரணம் ஏதும் உள்ளதா? அல்லது சட்டசபையிலும் சாதியப்பாகுபாடா? இவ்வாறு அமைதியாக இருப்பது தான் காவல்துறை இயக்குநர், உளவுத்துறை துணை இயக்குநரின் கட்டளையா? அல்லது வேறு எவரும் கட்டளையிட்டார்களா என்ற கேள்வி எழுகிறது. உண்மை காரணம் என்ன? ஏன் இந்த தாமதம். காவல்துறையினுடைய பத்திரிகை செய்தியில் இருக்கக்கூடிய அதே விசயத்தை சட்டமன்றத்தில் கூறும்போது தனக்கு இருக்ககூடிய 110 விதியைப் பயன்படுத்தி தனக்குக் கீழுள்ள உளவுத்துறை ஏன் கூறவில்லை என்பது வியப்பாக உள்ளது. மாண்புமிகு முதல் அமைச்சர் 26.04.2022 அன்று சட்டமன்றத்தில் மேல் சிகிச்சைக்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய பின்பும் 27.04.2022 வரை தாமதப்படுத்தியதற்கு ஏதேனும் சிறப்புக் காரணங்கள் உண்டா? அதன் பின்பு சுரேசை ஸ்டான்லி மருத்துவமனைக்கு மாற்றியுள்ளார்கள். சிறைத்துறை இந்த அளவுக்கு மெத்தனப்போக்குடன் செயல்படுவார்களா? காவல் சித்திரவதை நடைபெறவில்லை என்று சட்டசபையில் கூறுபவர்கள் மறைப்பதற்கு ஏதும் இல்லையென்றால் அயனாவரம், தலைமைச் செயலக காவல் நிலையங்களில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை வெளிப்படையாக அரசோ அல்லது காவல்துறையோ இதுவரை ஏன் வெளியிடவில்லை. மாண்புமிகு முதலமைச்சரின்

கட்டளைகள் கடைபிடிக்கா காவல்துறையா? காவல்துறைக்கு பொறுப்பாக இருக்கக்கூடிய முதலமைச்சருக்கே இதுதான் கதியா? இப்படி ஒரு காவல்துறை இருந்தால், சித்திரவதை இல்லா தமிழகம்! காவல் மரணம் இல்லா தமிழகம்! என்கவுன்டர் இல்லா தமிழகத்தை அவர் எப்படி நிலை நாட்டுவார்.

16. கடந்த 21.4.2022 அன்று சிபிசிஐடி விசாரணை மேற்கொள்ளப்படும் என காவல்துறைத் தலைவர் (DGP) அறிவித்த பின்னும் சிபிசிஐடி விசாரணை அதிகாரி யார் என்று இது வரை அறிவிக்காதது ஏன்? சுரேஷ் கைது பற்றிய முதல் தகவல் அறிக்கையும், விக்னேஷ் கைது பற்றி குற்றவியல் நடைமுறை சட்டம் 176 (A) இன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையும், ஏன் காவல்துறை இணையத்தில் இதுவரை பதிவேற்றவில்லை. இதில் என்ன இரகசியம்?

17. இதுவரை சென்னை உயர்நீதிமன்றமும், மாநில சட்ட உதவி ஆணைக் குழுவும், மாநில மனித உரிமை ஆணையமும், சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் புதிதாக உருவாக்கப்பட்டு செயல்படும் பட்டியல்/பழங்குடியினர் உரிமை ஆணையமும் கூட்டாக இவ்வளவு பிரச்சனையிலும் மௌனம் சாதிப்பது ஏன்? இது போன்ற கொடூர மனித உரிமை மீறல்களில், தானா முன்வந்து (Suo-Moto) செயல்பட அதிகாரம் இருந்தும் செயல்பட மறுப்பது ஏன்?

## இந்த வழக்கில் காவல் மரணம் நிகழ்வுக்குப் பின் நடந்தவை

| வ.எண் | நாள் | நடந்தவை |
|---|---|---|
| 01. | 18.04.2022 | **இரவு 11.00**<br>விக்னேஷ், சுரேஷ் மற்றும் ஆட்டோ ஓட்டுநர் பிரபு கெல்லீஸ் சிக்னலில் நிறுத்தப்பட்டு மிகக் கொடூரமாக சித்திரவதை செய்யப்படுகிறார்கள்.<br>**இரவு 11.00**<br>குதிரை முதலாளி ரஞ்சித் மற்றும் மான் என்ற மூன்று பேர் கெல்லீஸ் சிக்னலுக்கு சேர் ஆட்டோவில் வருகை. விக்னேஷ் தன்னிடம் பணி செய்கிறார் என்று ஒப்புக் கொள்கிறார். பிறகு காவல் சித்திரவதை தொடர்கிறது. |
| 02. | 19.04.2022 | **அதிகாலை 2.30**<br>விக்னேஷ், சுரேஷ், பிரபு K2 அயனாவரம் காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறார்கள்.<br>**அதிகாலை 3.00**<br>ஆட்டோ ஓட்டுநர் பிரபு K2 அயனாவரம் காவல் நிலையத்தில் இருந்து தன்னுடைய வீட்டிற்குத் திரும்பிச் செல்கிறார். |
| 03. | 19.04.2022 | **காலை**<br>K2 காவல் நிலையத்தில் சுரேஷ், விக்னேஷ் இருவருக்கும் காவல் நிலையத்தில் காலை உணவு கொடுக்கப்படுகிறது. பிறகு விக்னேஷ் K2 காவல் நிலையத்தில் இருந்து G5 காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறார். G5 காவல் நிலையத்தில் தொடர் சித்திரவதையால் உடல் நலம் பாதிப்பு ஏற்பட்டு விக்னேஷ் தனியார் மருத்துவமனைக்கும் பின்பு கீழ்பாக்கம் அரசு மருத்துவமனைக்கும் அவசர |

| | | |
|---|---|---|
| | | அவசரமாகக் கொண்டு செல்லப்படுகிறார். போகும் வழியில் விக்னேஷ்க்கு உயிரிழப்பு ஏற்படுகிறது. அதே நாள் சுமார் காலை 10.00 மணிக்கு K-2 காவல் நிலையத்திலிருந்து G-5 காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறார். அங்கிருந்து அவரை காவல்துறையினர் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று ரிமாண்ட் உத்தரவு பெற்று புழல் II சிறையில் அடைக்கப்படுகிறார். |
| 04. | 19.04.2022 | **காலை 10.30**<br>சுரேஷின் தாயார் கற்பகம்மாள் ஆட்டோ ஓட்டுநர் பிரபு கொடுத்த தகவலின் அடிப்படையில் பிரபுவின் ஆட்டோவில் K-2 அயனாவரம் காவல் நிலையத்திற்கு சுரேஷை தேடிச் செல்கிறார். காவலர்கள் மறுத்து ஏமாற்றத்துடன் திரும்புகிறார்.<br>அதே நாளில் காலை சுமார் 10.00 மணிக்கு தன்னுடைய பட்டினப்பாக்கம் வீட்டில் குளித்துக் கொண்டிருந்த வினோத்தை பட்டினப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் ராஜேஸ்வரி அவரை வீட்டிலிருந்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கின்றனர். அங்கிருந்து உறவினர் அண்ணன் வினோத், அடுத்த தம்பி விஜய்யும் ஆட்டோவில் G-5 தலைமைச் செயலக காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். செல்லும் வழியில் இவர்கள் இருவருக்கும் அவர்கள் தம்பி விக்னேஷ் காவல் மரணம் அடைந்தார் என்ற செய்தி கூறப்படுகிறது.<br><br>வினோத்தின் இன்னொரு தம்பியும் காவல் நிலையத்திற்கு கொண்டு வரப்படுகிறார். அவருக்கு ஆயிரம் விளக்கு காவல் நிலைய ஆய்வாளர் மோகன்தாஸ் அவர்களிடம் |

| | | |
|---|---|---|
| | | இரண்டு கட்டாக ஒரு லட்சம் ரூபாய் பணம் ரொக்கமாக விக்னேஷின் ஈமச் சடங்கிற்கு செலவு செய்ய கொடுக்கப்படுகிறது. அதே நாள் இரவு G-5 காவல் நிலையத்தில் இருந்து அருகாமையில் உள்ள மேன்சனில் தூங்குவதற்கு கூட்டிச் செல்லப்படுகிறார்கள். |
| 05. | 20.04.2022 | **காலை**<br>மேன்சனில் இருந்து G-5 காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். G-5 காவல் நிலையத்தில் இருந்து கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகிறார். மதியம் சுமார் 12.00 மணிக்கு வினோத் மடம்டும் விக்னேஷின் உடலைப் பார்க்க அனுமதிக்கப்படுகிறார். உடன் நீதித்துறை நடுவர் இங்கர்சால் இருக்கிறார்.<br><br>அதே நாள் மாலை விக்னேஷ் குடும்பத்தில் மற்றவர்கள் விக்னேஷ் உடலைப் பார்க்க அனுமதிக்கப்படாமல் சுமார் 150 காவலர்கள் சுற்றி இருக்க வீட்டிற்குக் கொண்டு செல்ல அனுமதிக்காமல் மயானத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.<br><br>**மாலை 5.00**<br>விக்னேஷின் அடக்கம் முடிந்து குடும்பத்தினர் வீட்டிற்குச் செல்கின்றனர். |
| 06. | 21.04.2022 | விக்னேஷின் இறப்பு வழக்கை சிபிசிஐடி-யிடம் ஒப்படைத்ததாக தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் அறிவிக்கிறார். 3 காவலர்கள் பணியிடை நீக்கம் செய்யப்படுகிறார்கள். |

| | | |
|---|---|---|
